**தலைப்பு 055 – வெகுசன ஊடக அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெகுசன ஊடக அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெகுசன ஊடக அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது இத்தலைப்பிற்காக ஒரு அமைச்சு இல்லாதிருந்ததனால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் ஒத்திருக்கின்றது என வெளிப்படுத்த முடியாதுள்ளது. அவ்வாறே முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாததனால் அதற்காக சிபார்சுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரி ஏடுகளின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் ரூபா 8,783,184 ஆக இருந்த போதிலும், அதனை ரூபா 8,670,154 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டியதன் காரணமாக வைப்பு பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 113,030 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளுடன் செய்யப்பட வேண்டிய செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் அது ரூபா 8,783,184 ஆகக் காட்டப்பட்டதானது நிதி அமைச்சிடமிருந்து உரிய மாற்றல் பத்திரங்களை உள்ளடக்கும் போதான தவறுகளின் காரணமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் முற்பணங்கள் பெற்றுக் கொள்ளல் ரூபா 5,996,796 ஆக இருந்த போதிலும் அது ரூபா 8,319,728 ஆக நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டிருந்ததனால் முற்பணங்கள் பெறுவனவுகள் ரூபா 2,322,932 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளுடன் செய்யப்பட வேண்டிய செம்மையாக்கல்களைச் செய்து சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டின் சனவரியிலிருந்து திசெம்பர் வரையான மொத்த வரவு மற்றும் செலவுப் பெறுமதிகள் காட்டப்பட்டுள்ளன. அதற்கிணங்க உரிய மீதிகளில் முறைப்படியாக நிதி அமைச்சு 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உரிய வரவு செலவுகளை செம்மையாக்கியதன் பின்னர் இறுதி மீதி ரூபா 21,500,329 ஆக நிதி அமைச்சின் ஏடுகளிலும் திறைசேரி அச்சுப் பிரதிகளிலும் சமமாக சமப்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 1,888,535 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,159,311 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததன் காரமணாக வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 729,224 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளுடன் செய்யப்பட வேண்டிய செம்மையாக்கல்களைச் செய்து சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திறைசேரி அச்சுப் பிரதிகளில் அது ரூபா 1,159,311 ஆக சுட்டிக் காட்டப்பட்டிருந்ததானது நிதி அமைச்சில் உரிய மாற்றல் பத்திரத்தை உள்ளடக்கும் போது ஏற்பட்ட தவறுகளின் காரணமாகும். |
| (ஈ) | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 26,459,385 ஆக இருந்த போதிலும், அதனை ரூபா 10,810,183 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டியிருந்ததன் காரணமாக முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 15,649,202 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி ஏடுகளுடன் செய்யப்பட வேண்டிய செம்மையாக்கல்களைச் செய்து சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி உரிய வரவு செலவு செம்மையாக்கியதன் பின்னர் இறுதி மீதி ரூபா 21,500,329 ஆக அமைச்சு ஏடுகளிலும் திறைசேரி அச்சுப் பிரதிகளிலும் சமமாக சமப்படுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி ரூபா 149,286,164 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதனை ரூபா 130,697,837 ஆக செம்மையாக்கியதன் காரணமாக நிதி செயலாற்றல் கூற்றில் கட்டுநிதி ரூபா 18,588,327 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியான கட்டுநிதி பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் சனவரியிலிருந்து திசெம்பர் வரையான வரவு செலவு பெறுமதிகள் மற்றும் இந்த அமைச்சிற்குரிய வைப்பு பெறுவனவு மற்றும் கொடுப்பனவுப் பெறுமதிகளை நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்குவேன். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றுக்களின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 11,734,358 ஆகக் காட்டப்பட்டிருந்தும் மூலதனச் சொத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 3,465,801 ஆகும். அதற்கிணங்க நிதியற்ற சொத்துக்கள் ரூபா 8,268,557 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | செலவுப் பேரேடு மற்றும் நிதிக் கூற்றுக்களின் பெறுமதிகளை ஒன்றுக்கொன்று செம்மையாக்கும் வகையில் சரியான பெறுமதியைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | அமைச்சின் நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் ஆண்டின் போது கொள்வனவுகளாக உள்ளடக்கப்பட்ட ரூபா 11,734,358 இல் அமைச்சின் உப அலுவலகமான தகவல் அறியும் ஆணைக்குழுவின் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 8,169,079 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் அமைச்சிற்குச் சொந்தமாக 35 வாகனங்கள் இருந்ததுடன் அவ்வாகனங்களின் பெறுமதி நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படாததனால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி பிழையானதாகும். | வாகனங்களின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சிற்குச் சொந்தமாக காணப்படுகின்ற வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு குறித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் கட்டுநிதி மீதியாக ரூபா 261,903 காட்டப்பட்டிருந்தும் திறைசேரி கணக்குகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,397,512 ஆக இருந்ததனால் கட்டுநிதி மீதி ரூபா 2,135,609 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் திறைசேரியின் ஏடுகள் மற்றும் நிதிக் கூற்றுக்களிலுள்ள மீதிகளை செம்மையாக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | அமைச்சினால் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைமை தொடர்பான கூற்றின் கட்டுநிதி மீதியாக ரூபா 261,903 காட்டப்பட்டிருந்தது. திறைசேரி கணக்குகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 2,397,512 ஆகும். |

**1.6.3 கட்டுநிதி செம்மையாக்கல் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சு ஏடுகள் மற்றும் திறைசேரி கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் முற்பணக் கணக்கின் பெறுவனவு மீதிகளுக்கும் கொடுப்பனவு மீதிகளுக்கும் இடையிலான வித்தியாசத்தின் தேறிய பெறுமதி ரூபா 20,403,945 ஆக இருந்த போதிலும், கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கிற்கு அதனை ரூபா 2,431,811 ஆக செம்மையாக்கியதன் காரணமாக கட்டுநிதி செம்மையாக்கலானது ரூபா 17,972,134 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் திறைசேரி ஏடுகளுடன் செய்யப்பட வேண்டிய செம்மையாக்கல்களைச் செய்து வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் சரியான பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீளாய்வாண்டிற்கான அமைச்சின் ஏடுகளுக்கும் 2019 ஆம் ஆண்டு தொடர்பாக சனவரியிலிருந்து திசெம்பர் வரையான மொத்த வரவுப் பெறுமதிகளுக்கும் செலவுப் பெறுமதிகளுக்கு மிடையேயான வித்தியாசத்தின் தேறிய பெறுமதி கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கிற்கு ரூபா 2,431,811 ஆக செம்மையாக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) | அமைச்சு ஏடுகள் மற்றும் திறைசேரி கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் வைப்புக் கணக்கின் பெறுவனவு மீதிக்கும் கொடுப்பனவு மீதிக்குமிடையிலான | வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் திறைசேரி ஏடுகளுடன் செய்யப்பட வேண்டிய செம்மையாக்கல்களை மேற்கொண்டு | மீளாய்வாண்டிற்காக அமைச்சின் ஏடுகளில் பதியப்பட்ட பெறுமதிக்கும் எங்களின் அமைச்சிற்குரிய வைப்பு பெறுவனவு, கொடுப்பனவு |

| | | |
|---|---|---|
| வித்தியாசத்தின் தேறிய பெறுமதி ரூபா 843,253 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கிற்கு அதனை ரூபா 227,061 ஆக செம்மையாக்கியதன் காரணமாக கட்டுநிதி செம்மையாக்கல்கள் ரூபா 616,192 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் சரியான பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீதிகளுக்குமிடையேயான வித்தியாசம் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கில் ரூபா 227,061 ஆக செம்மையாக்கப் பட்டிருந்தது. |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிணைப் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 89(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் கவனித்துக் கொள்வதாக தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) நட்டங்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு இணங்க நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். | அமைச்சினால் நி.பி 110 இன் பிரகாரம் பேணப்பட வேண்டிய பதிவேடு 2019 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்குதலில் தவறுகள் இடம்பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) கடமைத் தொலைப்பேசிப் பதிவேடு<br>---------------------------------------------<br>நிதிப் பிரமாணம் 845(1) இன் பிரகாரம் கடமைத் தொலைபேசிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் 26 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க கடமைத் தொலைபேசிப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | நிதிப் பிரமாணம் 845(1) இன் பிரகாரம் மற்றும் 26 ஆம் அத்தியாயத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாறு தொலைபேசிப் பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கின்றேன். |

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதி வரை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு நிதி ஆண்டின் மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | பொருள் மெய்மையாய் வானது பல குறைபாடுகளும் தவறுகளும் உடையதாக இருப்பதனால் அதற்காக புதிய பொருள் மெய்மையாய்வினை 2020 யூலை மாதத்தின் போது மேற்கொள்வதற்காக 5 குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானங்களை மிகவும் சரியாக முன்னறிந்து கொள்ளப்பட வேண்டிய போதிலும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 1,200 மில்லியன் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 615 மில்லியனாக இருந்ததனால் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 51 சதவீதம் மாத்திரமாகும். | மதிப்பீடுகளில் சிக்கல் காணப்படுமாகயிருந்தால் திறைசேரியுடன் கலந்தாலோசித்து தீர்த்து வைக்கப்பட வேண்டியதுடன் மதிப்பீட்டின் பிரகாரம் வருமானத்தை சேகரித்துக் கொள்வதற்கு கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். | திறைசேரி செயலாளரின் 2015 யூலை 20 ஆந் திகதிய அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் முன்னறிந்து கொள்ளப்பட வேண்டியதுடன் கணக்காய்வு ஐயவினாவில் 2019 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 1,200,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், 2019 ஆம் ஆண்டிற்காக அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 600,000,000 ஆகும். |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இரண்டு தனியார் ஊடக நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய வரி வருமானம் தண்டப்பணத்துடன் ரூபா 53,157,130 ஆகும். மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பணம் நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் நிலுவை வருமானக் கூற்றில் அது பதியப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வரிப் பணத்தை முடியுமான அளவு விரைவாக அறவிடப்பட வேண்டியதுடன் நிலுவை வரி தொடர்பாக நிலுவை வருமானக் கூற்றில் பதியப்படுதல் வேண்டும். | இந்நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக 3 மாதங்களுக்குள் முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 25 மீண்டுவரும் செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டில் 7 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன் இதற்காக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை அல்லது மதிப்பீடு செய்தலில் பலவீனம் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | பதவியணியினர்களில் வெற்றிடங்கள் காணப்படுதல், சிக்கனமாக செலவுகளை மேற்கொள்ளல், செலவுகள் இடம்பெறாமை, எதிர்பார்த்தவாறு செலவுகள் இடம்பெற்றிருக்காமை என்பன சேமிப்புக்களுக்கு காரணமான விடயங்களாகும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 2020 மே 31 ஆந் திகதி வரை வவுச்சர்கள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 232,436 தொகையான பொறுப்புக்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வருடாந்த நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 150 இன் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனைத்து பொறுப்புக்களும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். | வவுச்சர்கள் தவறுதலாக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளில் காட்டப்படாதிருந்த போதிலும், சேவை அத்தியாவசியத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. |

## 2.4 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட | பிரமாணங்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த | முறைப்படியாக தீர்த்து வைக்காத உத்தியோகத்தர் |

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல்நிமித்த உபகட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், 83 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 1,804,012 கூட்டுமொத்தமான உப கட்டுநிதியானது செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 31 நாட்களிலிருந்து 236 நாட்கள் வரையான காலப்பகுதியின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவை, நிதிப் பிரமாணம், சுற்றறிக்கை ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | களுக்கு மீண்டும் முற்பணங்கள் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் இது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறையான மேற்பார்வையின் கீழ் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிருவாகப் பிரிவினையும் உள்ளடக்கி ரூபா 3 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 5 செயற்பாடுகளில் 4 செயற்பாடுகளின் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்படாதிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட அளவும் 5 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | திட்டமிடப்பட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதிய செயற் திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரச் சட்டத்தை 2019 ஆம் ஆண்டில் அங்கீகரித்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் | திட்டமிட்டவாறு நடவடிக்கையை நிறைவேற்றுதல் வேண்டும். | இந்த அதிகாரச் சட்டத்தின் வரைபுக்கு 2020 மார்ச் 04 ஆந் திகதி அமைச்சரவை வழங்கிய தீர்மானத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட அண்ணளவான |

| | | |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அந்த இலக்கு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | வரைபானது இத்துறையில் அனுபவமுள்ள நபர்களைக் கொண்ட அறிஞர்கள் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் தற்பொழுது மீளாய்வு நடவடிக்கையானது அக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 02 லெப்டொப் கணனிகள் மற்றும் 02 மின்சார விசிறிகள் காணாமல் போனமை சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் காணாமல் போகையில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய விசாரணை நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 02 லெப்டொப் கணனிகள் மற்றும் 02 மின்சார விசிறிகள் காணாமல் போனமை சம்பந்தமாக நி.பி 103 இலிருந்து 105 வரை மற்றும் நி.பி 108 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் இந்த விசாரணையின் செயல் முன்னேற்றம் சம்பந்தமாக உங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவின் பிரகாரம் தொடக்க புலனாய்வினை நடாத்துவதற்காக பணிக்கப்பட்ட அதிகாரியினால் ஒவ்வொரு சம்பவனத்தினதும் தன்மையை கவனத்தில் கொண்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான புலனாய்வினை எவ்வளவு காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று பணிப்புரை வழங்கப் படுகின்ற சந்தர்ப்பத்திலேயே நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். எனினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய ஒரு வாகனம் சம்பந்தமான தொடக்க விசாரணை அறிக்கையானது விபத்து இடம்பெற்று 2 ஆண்டுகளை அண்மித்த காலதாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக வாகனத்தை திருத்தம் செய்யும் நடவடிக்கைக்கு 2½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்பட்டிருந்தது. | வாகன விபத்து சம்பந்தமான தொடக்க விசாரணையை விரைவாக முடிவுறுத்துவதற்கு கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். | வாகனத்தின் திடீர் விபத்து சம்பந்தமான தொடக்க விசாரணை நடவடிக்கை தாமதித்தமையை ஏற்றுக்கொள்வதுடன் அவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமைக்கு உரிய உத்தியோகத்தர் களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. |
| (ஆ) | அரசாங்கத்தின் செய்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு கெப் வாகனம் அமைச்சின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2016 திசெம்பர் 26 ஆந் திகதி | தொடக்க விசாரணை நடவடிக்கைகளை விரைவாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த அவதானிப்புடன் இணங்குவதுடன் 2016.12.26 ஆந் திகதி இடம்பெற்ற திடீர் விபத்து சம்பந்தமான தொடக்க விசாரணையை மேற்கொள்வதற்காக 2018.06.13 ஆந் திகதி ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | விபத்துக்குள்ளாகியிருந்தது. அந்த கெப் வாகனத்தை திருத்தம் செய்வதற்காக கூட்டப்பட்ட பெறுகைக் குழுக் கூட்டத்தின் போது அமைச்சினால் வாகனத்தின் சேதம் மற்றும் நட்டம் சம்பந்தமான புலனாய்வினை மேற்கொள்வதற்கு உட்பட்டு உரிய வாகனம் ரூபா 453,000 தொகைக்கு செய்தித் திணைக்களத்தினால் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் 26 ஆந் திகதி வரை விபத்துக்கள் சம்பந்தமான தொடக்க விசாரணை நடாத்தப்பட்டிருக்க வில்லை. | | மீளாய்வுக்குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அந்த விசாரணை அறிக்கை வழங்கப்படவில்லை. |
| (இ) | பத்தரமுல்லை அபேகம வளவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற அமரதேவா ஆசிரமத்தை நிர்மாணித்தல் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 250 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக வேலை ஆயத்தப்படுதல் முற்பணமாக (Mobilization Advance) ரூபா 31,390,535 தொகையும் செய்யப்பட்ட வேலைகளுக்காக ரூபா 33,962,434 தொகையும் 2019 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரை செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிர்மாணத்தின் செயல் முன்னேற்றம் 10 சதவீதமாகும். மேலும் 2019 செப்தெம்பர் அளவில் ஒப்பந்தக்காரரால் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் அதுவரை மீண்டும் அறவீடு செய்ய முடியாதிருந்த முற்பணம் ரூபா 20,951,883 ஆகும். | அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்து உரிய பணத்தை முடியுமான அளவு விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். | ஆலோசனை நிறுவனத்தின் கணிப்பீட்டின் பிரகாரம் முற்பண பணத்தையும் உள்ளடக்கி அறவிட வேண்டிய மொத்த பணத்தை அமைச்சிற்கு செலுத்துமாறு தற்பொழுது நிர்மாண நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்த துடன் அக்கொடுப்பனவு செய்யப்படவில்லை யாயின் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆசிரமத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கையை மீண்டும் முறையான பெறுகை நடைமுறையின் கீழ் தெரிவு செய்யப்படுகின்ற நிர்மாண நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த தனால் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட உடன் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |